**அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 17 கமநல சேவை குழுக்களின் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 17 கமநல சேவை குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 58(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

1.2 2023 யூன் 27 ஆந் திகதி வரை 2022 ஆம் ஆண்டு தொடர்பாக அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 17 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 03 குழுக்களுக்கு பாதகமான அபிப்பிராயமும் 14 குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமும் வழங்குவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,228,493 குறைத்தும் அம்பாந்தோட்டை கமநல சேவை குழுவின் நிலையான வைப்பு மீதி ரூபா 1,148,902 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்தவறுகளை 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கைகளில் சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்காண்டிற்கான அனைத்து வருமானங்களையும் இனங்காண்பதற்கும் நிதிக்கூற்றுக்களை முழுமையாகவும் சரியாகவும் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 05 கமநல சேவை குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நானாவித விடயங்களின் செலவுகள் ரூபா 398,309 அதிகரித்தும் ரூபா 192,990 குறைத்தும், 09 கமநல சேவை குழுக்களின் | இத்தவறுகளை 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கைகளில் சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்காண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகளை செம்மையாக்குவதற்கும் நிதிக்கூற்றுக்களை முழுமையாகவும் |

| | | |
|---|---|---|
| நானாவித விடயங்களின் வருமானங்கள் ரூபா 2,785,213 குறைத்தும், மற்றும் 3,859,210 அதிகரித்தும், 09 கமநல சேவை குழுக்களின் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 973,627 குறைத்தும் மற்றும் ரூபா 1,515,825 அதிகரித்தும், 07 கமநல சேவை நிலையங்களின் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 28,816,544 குறைத்தும் மற்றும் 1,993,160 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | சரியாகவும் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 04 கமநல குழுக்களின் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 35,372,578 குறைத்தும் ரூபா 2,399,449 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் குழு அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 04 நிரலையங்களின் காணிகளை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் ஏனைய தவறுகள் 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கைகளில் சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | குழுவுக்குரிய அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களை சரியாகவும் முழுமையாகவும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 கமநல குழுக்களின் 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுக்கும் துணை அறிக்கைகளுக்குமிடையேயான மீதிகளில் ரூபா 1,244,560 இணக்கமின்மை காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கைகளில் சரிசெய்து காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கிணக்கமின்மைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரம் கிடைக்காத கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அம்பாந்தோட்டை கமநல குழுக்களினால் பசளை நடைட்முறைக் கணக்கிலிருந்து ரூபா 623,795 தொகை வெளி ஒப்பந்தக்காரருக்கு கடன் | இப்பணம் மீண்டும் குழுவிற்கு கிடைத்துள்ளதுடன் கணக்குகளுக்கிடையே தீர்த்துவைப்பதற்கும் மேல் அங்கீகாரத்தினைப் | கமநல சேவை ஆணையாளரின் 1981 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 02 கமநல சேவை குழுக்களினால் ரூபா 667,486 தொகை வெளி ஒப்பந்தக்காரருக்கும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 10 ஆம் பந்தியில் குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 13 கமநல சேவை குழுக்களின் ரூபா 46,948,556 தொகையான சொத்துக்களுக்குரிய விபரமான பட்டோலை பொருள் மீளாய்வு அறிக்கை வங்கி கணக்கிணக்க கூற்று, மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம், வங்கி பாஸ் புத்தகம், காலப்பகுப்பாய்வு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, கடன் பதிவேடு மற்றும் 04 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக ரூபா 2,199,768 தொகையான பொறுப்புக்களுக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், விபரமான குறிப்புக்கள் மற்றும் கடன்கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு மற்றும் 02 கமநல சேவை குழுக்களின் ரூபா 916,923 தொகையான வருமான செலவு கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள், மதிப்பீடுகள் மற்றும் கொடுப்பனவு அறிக்கைகளும் அளவீட்டுப் பத்திரங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் அக்கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய மற்றும் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | 2023 கணக்கறிக்கைகளில் சரியான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான பதிவுகள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை உள்ளடக்குமாறு பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானங்கள் செலவுகளை உறுதிப்படுத்துதல் மற்றும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு** | | | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டம்** | | | | |
| | (i) | 51(1) ஆம் பிரிவு | கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் ஏதாவதொரு பிராந்தியத்திற்காக ஒரு கமநல அபிவிருத்தி சபையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 17 கமநல சேவை குழுக்கள் கமநல அபிவிருத்தி சபைகளைத் தோற்றுவித்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறிவுறுத்தல் கிடைத்திருக்காததுடன் அதற்காக அறிவுறுத்தல்கள் கிடைத்த உடன் கமநல அபிவிருத்தி சபைகளைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 56 (3) மற்றும் (4) ஆம் பிரிவுகள் | 06 கமநல சேவை குழுக்களின் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 961,956 ஆன நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரியினை அறவீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 110 | 12 கமநல சேவை குழுக்களின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை பேணியிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 | 04 கமநல சேவை குழுக்களில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 237 (ஆ) | களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது பொருட்கள் கிடைத்துள்ளது என்பதனை உறுதிப்படுத்தி உரிய பொருள் இருப்பு ஏடுகளில் உள்ளடக்கப்பட்டள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,096,408 தொகையான கொள்வனவுகள் சம்பந்தமாக 04 கமநல சேவை குழுக்கள் உரியவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 245 மற்றும் 257 | லுனம கமநல சேவை குழுக்களினால் 2022 திசெம்பர் 30 ஆந் திகதி கமநல அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்ட 284 ஆம் இலக்க ரூபா 59,899,000 தொகையான கொடுப்பனவு வவுச்சர்கள் அங்கீகரிக்கப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | தவறு இடம்பெற்றது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 272(3) | சான்றுபடுத்திய அனைத்து வவுச்சர்களும் கணக்காய்விற்குச் | கணக்காய்வுச் சந்தர்ப்பத்தின் போது வவுச்சர்களை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அங்குனுகொலபெலஸ்ஸ கமநல சேவை குழுவினால் ரூபா 125,919,919 பெறுமதியான 03வவுச்சர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சான்றுபடுத்துவதற்காக கமநல சேவை உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்டளதுடன் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | வேண்டும். |
| (vi) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | அம்பலன்கொட கமநல சேவை குழுவினால் வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 156,623 மொத்த தொகையான 08 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புபட்ட பிரமாணத்தின் பிரகாரம் நடவபடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | நிதிப்பிரமாணம் 454(2) | 05 கமநல சேவை குழுக்கள் மின் உபகரணம் தொடர்பான ஒரு பதிவேட்டினை பேணியிருக்கவில்லை. | தற்பொழுது பதிவேடு ஆரம்பித்து பேணப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | நிதிப்பிரமாணம் 754 | லுனம கமநல சேவை குழுவினால் ஆண்டின் இறுதியில் பொருள் பதிவேட்டுப் புத்தகம் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) | நிதிப்பிரமாணம் 756 | 04 கமநல சேவை குழுக்களினால் 2022 ஆம் ஆண்டிற்காக பொருள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது பொருள் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) கமநல சேவை ஆணையாளரின் 1981 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 03 (உ) பிரிவு | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கணக்கேடுகளில் முறைப்படியாகவும் உரிய நேரத்திலும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் கடுவன கமநல சேவை குழுவினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறைப்படியாக உரிய வேளைக்கு கணக்கேடுகளில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 17 (3) ஆம் பந்தி | செலவுகளை சான்றுபடுத்துகின்ற உத்தியோகத்தர்களினால் வவுச்சர்களில் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் 02 கமநல சேவைக் குழுக்கள் ரூபா 315,664 மொத்த தொகையான 10 வவுச்சர்களை சான்றுபடுத்தியிருக்கவில்லை. | கையொப்பமிடப்படாத வவுச்சர்களில் கையொப்பமிட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 30 (1) ஆம் பந்தி | குழுவின் இருப்பு, பணம், பொருட்கள் மற்றும் ஏனைய அனைத்து கட்புலனாகும் சொத்துக்களும் செயலாளரினால் நிதி ஆண்டு இறுதியின் போது ஆகக்குறைந்தது குழுவின் ஒரு அங்கத்தவரினை உள்ளடக்கி பரீட்சித்துப் பார்த்து சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் | ஆண்டின் இறுதியில் இருப்புக்கள் பெறுமதியிடப்பட்டுள்ளது. கையொப்பமிடுவதற்கு தவறிய சந்தர்ப்பங்களை தேடிப்பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 03 கமநல சேவை குழுக்களினால் சான்றுபடுத்தி கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | 30 (4) ஆம் பந்தி | குழுக்களின் கட்டிடங்களின் தொடக்க பெறுமதியில் 5 சதவீதப் படி பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் பதகிரிய கமநல சேவை குழுவினால் குறைத்தெழுதிய மீதி முறைமையில் 5 சதவீத படி பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் 15 கமநல சேவை குழுக்களின் மிகைகள் ரூபா 10,169,811 மொத்த தொகையும் 02 கமநல சேவை குழுக்களின் பற்றாக்குறைகள் ரூபா 157,188 மொத்த தொகையும் 17 கமநல வங்கிகளின் தேறிய இலாபம் ரூபா 5,847,613 மொத்த தொகையும் ஆகும். 2021 ஆம் ஆண்டில் 14 கமநல சேவை குழுக்களின் மிகைகள் ரூபா 11,974,993 மொத்த தொகையும் 03 கமநல சேவை குழுக்களின் பற்றாக்குறைகள் ரூபா 1,503,995 மொத்த தொகையும் 17 கமநல வங்கிகளின் தேறிய இலாபம் ரூபா 3,900,344 மொத்த தொகையும் ஆகும்.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை குழுக்களின் குழு மற்றும் பசளை கணக்குகள் தொடர்பான வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 1,127,269 மொத்த தொகையான வைப்புச் செய்யப்பட்ட எனினும் தேறப்படாத காசோலைகள் மற்றும் நடைமுறைக் கணக்குகளுக்கு நேரடியாக | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் மீதிகள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்யப்பட்ட காசு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 06 கமநல சேவை குழுக்களின் 09 நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளின் நீண்ட காலமாக செயற்படாது காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 16,262,180 ஆகும். இப்பணத்தை மிகவும் வினைத்திறனான முதலீட்டில் ஈடுபடுத்தி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணத்தை மிகவும் வினைத்திறனான ஒரு முதலீட்டில் ஈடுபடுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | குழுக்களின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள சிறு நீர்ப் பாசன குளங்களின் நீர் கொள்ளளவுகளை அளவீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த 65 நீர் உயர அளவீட்டு மானிகள் 05 கமநல சேவை குழுக்களினால் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த உபகரணம் சிறிய நீர்ப்பாசன குளங்களின் நீர் கொள்ளளவுகளை அளவீடு செய்வதற்கு வழங்கப்படும். | உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 05 கமநல சேவை குழுக்களினால் 2021/2022 பெரும் போகத்தில் மற்றும் 2022/2023 பெரும் போகத்தில் சுற்றாடலுக்குச் சாதகமான சேதனப் பசளைகளை இலவசமாக பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 17,815,662 பெறுமதியான பசளை இருப்புக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படாது வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்கல் நிறுவனத்திற்கு மீண்டும் இப்பசளை இருப்பினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான அளவில் கட்டளையிடப்பட வேண்டியதுடன் அந்த இருப்பினை சரியாக பகிர்ந்தளித்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 329,137 கிரயமான காலாவதியான விவசாய இரசாயனங்கள், காய்கறி விதைகள், விதை நெல் மற்றும் இரசாயன பசளை இருப்புக்கள் சம்பந்தமாக 02 கமநல சேவை குழுக்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்புக்களைப் பதிவழிப்பதற்காக உதவி ஆணையாளரின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. | காலாவதியாவதற்கு முன்னர் விற்பனை செய்வதற்கு அல்லது திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 08 கமநல சேவை குழுக்களின் 08 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்லங்கள், 04 விற்பனை நிலையங்கள், 02 சீசீரீவி கமரா முறைமைகள், ஒரு பழைய பசளைக Mளஞ்சியம், சேதனப் பசளை தயாரிக்கும் 02 இயந்திரங்கள், ஒரு வேளாண்மை வெட்டும் இயந்திரம், ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு புல் வெட்டும் இயந்திரம், ஒரு பெக்ஸ் இயந்திரம் என்பன பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | கமநல உத்தியோகத்தர் இல்லங்கள், பசளைக் களஞ்சியம் என்பவற்றை திருத்தம் செய்வதற்காக குழுக்களிடம் போதியளவு பணம் இல்லாததனால் திருத்தம் செய்வதற்கான செலவு மதிப்பீடும் நிதி ஏற்பாடும் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திடம் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய சொத்துக்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க திருத்தம் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கும் ஏனைய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 02 கமநல சேவை குழுக்களினால் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.3.2 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 734,160 தொகையான விதை நெல் சேதனப் பசளை, அலுவலக உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இத்தவறுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 05 கமநல சேவை குழுக்களின 48 பிரிவுகளில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடமான பிரிவுகளுக்கு பதில் கடமை நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கமத்தொழில் வங்கி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 10 கமத்தொழில் வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 10,859,354 செயற்பாடற்ற கடன் மீதி மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் பணத்தையும் வட்டியையும் அறவீடு செய்வதற்காக கமத்தொழில் நீதிச் சபை தீர்மானத்தின் பிரகாரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நெடொல்பிடிய கமநல வங்கியின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பௌதீக ரீதியாக அவதானிக்கப்படாத ரூபா 912,063 தொகையான கையிலுள்ள மீதி மற்றும் ரூபா 130,404 தொகையான தொங்கல் கணக்கு தீர்த்துவைக்கப்படவில்லை. | குழு இலிகிதரினால் 1999 இலிருந்து 2006 வரை மேற்கொள்ளப்பட்ட பிழை எனவும் அந்த மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | மீதிகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் சரிசெய்யப்படுதல் வேண்டும். |